**நவகத்தேகம பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நவகத்தேகம பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 53-6134 ஆம் இலக்க கப் வண்டியின் பெறுமதியான ரூபா 1,500,000 தொகையும், கணனி அச்சீட்டு இயந்திரத்தின் பெறுமதியான 15,500 தொகையும் பிரதேச சபைக் கட்டிடத்தின் பெறுமதியான ரூபா 774,000 தொகையும் 11 பொதுக் கேட்போர் கூடங்களின் பெறுமதியான ரூபா 2,040,000 தொகையும் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) பெறவேண்டிய முத்திரைக் கட்டணப் பெறுமதி கணிப்பிடப்பட்டிராததுடன் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஓர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த இருப்புத் தொகையான ரூபா 13,767 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 நவம்பர் 22 ஆம் திகதி மீளச் செலுத்தப்பட்ட 10 சதவீதமான பிடித்து வைத்தல் வரித் தொகையான ரூபா 28,500 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 10,540,765 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 845,515 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 72,811 ஆக இருந்தது

### 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,324,438 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு வருடம் கடந்த நிலுவை மீதி ரூபா 21,000 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் வெளித்தரப்பினருக்குச் செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,216,911 தொகையானதுடன் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 628,155 ஆகக் காணப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i). | வாடகை | 1,687 | 720 | 967 |
| (ii). | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 141 | 100 | 41 |
| (iii). | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,436 | 2,042 | 394 |
| (iv). | ஏனைய வருமானம் | 14,164 | 507 | 13,657 |

#### 2.3.2 வாடகை

2009 ஒக்டோபர் 02 ஆம் திகதி சபைக்குரிய நூலகக் கட்டிடம் கிரிமெட்டியாவ சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு 2011 நவம்பர் வரை மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கிடப்பட்டிருந்தது. 2010 ஏப்ரல் மாதம் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 02 ஆம் திகதி வரை நிலுவையான கடை வாடகையான ரூபா 18,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

2003 யூன் 18 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 332,500 பெறுமதியான மினி குபோட்டா உழவு இயந்திரம் மற்றும் இழுவை இயந்திரம் பல வருடகாலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் இது வரை அதன் உரிமையைக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

2014 சனவரி 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கண்டறியப்பட்டவாறு பிணைப்புக் கற்களும் கொங்கிரீட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் சிலவற்றிலும் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) கொங்கிரீட் அணையின் இரு மருங்கிலும் 02 அடி அகலத்திற்கு போதியளவு சல்லிக் கற்கள் இடப்பட்டு முறைப்படி பதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதியின் இரு மருங்கிலும் கொங்கிரீட் அணை வெடிப்பிற்குள்ளாகியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) கொங்கிரீட் அணையின் அகலமும் உயரமும் மதிப்பீட்டின் படி இருக்கவில்லை. இரு மருங்கிலும் 02 அடி அகலத்திற்கு போதியளவு சல்லிக் கற்கள் இடப்பட்டு முறைப்படி பதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிணைப்புக் கல் பதிக்கப்படுகையில் ஒரே மட்டத்தில் காணப்படவில்லை.

(உ) உடன்படிக்கையின் படி குறித்த நாட்களில் மேற்கொள்ளப்பட்டிராத கைத்தொழில்களில் உடன்படிக்கையிடப்பட்ட காலம் நீடிக்கப்படுவதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதிப் பராமரிப்பு வரித்தொகை அறவிடப்படுவதற்காக சபையால் துணை சேவைக்குறிப்பு விதிக்கப்பட்டிராமையால் சபைக்கு அவ் வரித்தொகைரய அறவிட முடியாதிருந்தது.

(ஆ) பிணைப்புக் கல் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக உற்பத்திக் கணக்கொன்றைத் தயாரிப்பதன் மூலம் அலகிற்கான உற்பத்திக் கிரயம் கணிப்பிடப்பட்டிராததுடன் செயற்திட்டத்தின் இலாப நட்டங்கள் வெவ்வேறாக கணிப்பிடப்படாது அது வருமானச் செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) பிணைப்புக் கல் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக நிலையான இடம் ஒன்று இல்லாததுடன் இது தற்போது சந்தை வளாகத்தில் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2013 செப்தெம்பர் 15 ஆம் திகதி விபத்திற்குட்பட்ட 252 – 6364 ஆம் இலக்க கப் வண்டி கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 02 ஆம் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் நிலையான சொத்தாகக் கணக்கிடப்பட்டிருந்த ரூபா 5,751,463 பெறுமதியான காணி, கட்டிடங்களின் உரித்துறுதியின் மூலமோ அல்லது அனுமதிப்பத்திரத்தின் மூலம் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் வாகனங்களிற்குரித்தான ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்பு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதுமானளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு